**முக்கிய சுருக்க ஆவணம்**

எம் மீது நம்பிக்கை வைத்து HSBC கிறெடிட் கார்ட் ("கிறெடிட் கார்ட்") ஒன்றிற்கு விண்ணப்பித்தமைக்காக உங்களுக்கு நன்றி. தெளிவான மற்றும் வெளிப்படையான நடைமுறையை உறுதிப்படுத்துவதற்காக, கிறெடிட் கார்ட்களுடன் தொடர்புடைய முக்கியமான விதிகள் மற்றும் நிபந்தனைகளைக் கீழே தெரிவித்துள்ளோம். தயவுசெய்து அவற்றை வாசித்துப் புரிந்துகொள்ளவும்.

- விண்ணப்பங்களின் அங்கீகாரம், ஏதேனும் கிறெடிட் கார்ட்டிற்கென ஒதுக்கப்படும் கடன் உச்சவரம்பு (பண மீளப்பெறுகை உச்சவரம்பும் இதில் உள்ளடங்கும்) என்பன த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட்டின் ("HSBC") தனித் தற்றுணிபைப் பொறுத்தது என்பதுடன், விண்ணப்பதாரரோ அல்லது வேறேதும் தரப்பினரோ அவற்றை முன்கூட்டியே தீர்மானிக்க முடியாது.

- உங்கள் விண்ணப்பம் HSBCக்கு கிடைத்ததும், தேவையான சகல ஆவணங்களும் ஒழுங்காக இருக்கும் பட்சத்தில், அதனைச் செயற்படுத்துவதற்கு வழமையாக குறைந்தபட்சம் 10 வேலை நாட்கள் எடுக்கும்.

- இந்த விண்ணப்பம் HSBCயினால் நிராகரிக்கப்படும் பட்சத்தில், விண்ணப்பத்தையும் அதனுடன் சமர்ப்பிக்கப்பட்ட சகல ஆவணங்களையும் அழித்துவிடும் உரிமை HSBCக்கு உண்டு.

- விண்ணப்பம் அங்கீகரிக்கப்படுமானால், உங்கள் புதிய கிறெடிட் கார்ட் உங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உங்கள் தபால் முகவரிக்கு அனுப்பீட்டுச் சேவை மூலம் அனுப்பிவைக்கப்படும்.

- வருடாந்தக் கட்டணம் என்பன உங்கள் விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்ட மாதத்திலிருந்து ஒவ்வொரு 12 மாதச் சுற்றுவட்டத்தின் ஆரம்பத்திலும் அறவிடப்படும். அது உங்கள் கிறெடிட் கார்ட்டின் செல்லுபடியாகும் காலத்துடன் தொடர்புபட்டதாக இருக்காது. கட்டணங்களின் வீதங்கள் பின்வரும் முறையில் அமைந்திருக்கும்:

| **கட்டண வகை** | **வீசா கோல்ட்** | **வீசா பிளட்டினம் கேஷ்பெக்** | **HSBC Live +** | **வீசா ரிவோட்ஸ்** | **HSBC அட்வான்ஸ்** | **HSBC பிரிமியர்** |
|---|---|---|---|---|---|---|
| சேர்வுக் கட்டணம் (பிரதான கார்ட்)* | தள்ளுபடி | தள்ளுபடி | தள்ளுபடி | தள்ளுபடி | இலவசம் | இலவசம் |
| வருடாந்தக் கட்டணம் (பிரதான கார்ட்)* | ரூ.3,000/- | ரூ.4,500/- | ரூ.4,000/- | ரூ.6,500/- | இலவசம் | இலவசம் |
| சேர்வுக் கட்டணம் (மேலதிக கார்ட்)* | தள்ளுபடி | தள்ளுபடி | தள்ளுபடி | தள்ளுபடி | இலவசம் | இலவசம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வருடாந்தக் கட்டணம் (மேலதிக கார்ட்)* | ரூ.1,000/- | ரூ.2,000/- | ரூ.1,500/- | ரூ.2,500/- | இலவசம் | இலவசம் |
| வட்டி வீதம் (கொள்வனவுகள் மற்றும் ரொக்க முற்பணம்)* | மாதம் ஒன்றிற்கு 2.33% | மாதம் ஒன்றிற்கு 2.33% | மாதம் ஒன்றிற்கு 2.33% | மாதம் ஒன்றிற்கு 2.33% | மாதம் ஒன்றிற்கு 2.33% | மாதம் ஒன்றிற்கு 2.12% |

- எமது கிறெடிட் கார்ட்கள் தொடர்பில் நீங்கள் ஆகக் கூடியதாக 51நாட்களும் ஆகக் குறைந்ததாக 21 நாட்களும் வட்டியற்ற கடன் வசதியைப் பெறுவீர்கள்.
- உங்கள் பட்டியலிடப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள், எஞ்சியுள்ள மீதி, செலுத்த வேண்டிய குறைந்தபட்ச கொடுப்பனவு, கொடுப்பனவு செலுத்த வேண்டிய திகதி, HSBC ரிவோட்ஸ் சுருக்கம் மற்றும் HSBC உங்களுக்குத் தெரிவிக்க விரும்பும் ஏதேனும் முக்கிய தகவல்களின் விபரங்களை உள்ளடக்கிய விபரக்கூற்றுகள் உங்களுக்கு மாதாந்தம் அனுப்பப்படும்.
- விபரக்கூற்றுத் தொகுப்புச் சுற்றுக்கள் பலவற்றை HSBC கொண்டுள்ளது. உங்கள் விபரக்கூற்று உருவாக்கப்படும் திகதியை நீங்கள் மாற்றிக்கொள்ளலாம்.
- உங்கள் கிறெடிட் கார்ட் தொடர்பில் செலுத்த வேண்டிய குறைந்தபட்ச கொடுப்பனவு பின்வருமாறு:
  - உங்கள் ஒவ்வொரு பணத் தவணைத் திட்டத்தினதும் செலவுத் தவணைத் திட்டத்தினதும் (ஏதேனும் இருப்பின்) மாதாந்தத் தவணைத் தொகையில் 100%. அத்துடன்,
  - உங்கள் கணக்கிற்கு விதிக்கப்பட்ட ஏதேனும் வட்டி, தாமதக் கட்டணம் மற்றும் உச்சவரம்பு மீறல் கட்டணத்தின் 100%. அத்துடன்,
  - கிறெடிட் கார்ட் வருடாந்தக் கட்டணங்களில் 1/12 பகுதி. அத்துடன்,
  - எஞ்சியுள்ள உங்கள் நிலுவை மீதியின் (அதாவது, உங்கள் மொத்த நிலுவை மீதியில் முன்னைய 3 புலட் குறிப்புகளிலும் தெரிவிக்கப்பட்டுள்ள தொகைகள் நீங்கலாக) 1%. அத்துடன்,
  - உங்கள் கணக்கு கடன் உச்சவரம்பை மீறியிருந்தால், உச்சவரம்பிற்கு மேன்மிகுதியான தொகை அல்லது ரூ.500/- என்பவற்றில் எது கூடியதோ அத் தொகை எனினும், உங்கள் மொத்த நிலுவை மீதி ரூ.500/- க்கு குறைவாக இருந்தால், உங்கள் மொத்த நிலுவை மீதியே உங்கள் குறைந்தபட்ச கொடுப்பனவாக இருக்கும்.

- செலுத்த வேண்டிய திகதி ஒரு விடுமுறை தினமாக இருந்தால், அதற்கு அடுத்த வங்கி வேலை நாள் கொடுப்பனவைச் செலுத்த வேண்டிய நாளாக அமையும்.
- செலுத்த வேண்டிய திகதியில் முழுக் கொடுப்பனவும் செலுத்தப்படாவிட்டால் அல்லது பகுதி/குறைந்தபட்சக் கொடுப்பனவு மட்டும் உரிய திகதியில், அதற்கு முன் அல்லது அதற்குப் பின் செலுத்தப்பட்டால் அல்லது உரிய திகதிக்குப் பின் முழுக் கொடுப்பனவும் செலுத்தப்பட்டால் வட்டி அறவிடப்படும். இந்த வட்டிக் கூறு, அடுத்த விபரக்கூற்றுச் சுற்றுவட்டத் திகதியில் கார்ட் கணக்கில் பற்றுவைக்கப்படும்.

- ஒதுக்கப்பட்ட கடன் உச்சவரம்பானது பட்டியல் காலத்தின் ஏதேனுமொரு நேரத்தில் மீறப்பட்டால், உச்சவரம்பு மீறல் கட்டணமாக ரூ. 2,100/- அறவிடப்படும். மேற்குறிப்பிட்ட நோக்கத்திற்காக, கடன் உச்சவரம்பு மீறப்பட்டுள்ளதா என்பதைக் கணிக்கும்போது HSBCயின் அறவீடுகள்/கட்டணங்களும் கவனத்திற்கொள்ளப்படும்.
- கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டிய திகதிக்குள் குறைந்தபட்ச கொடுப்பனவு தொகையையாவது செலுத்தத் தவறினால், தாமதக் கட்டணமாக ரூ.2,100/- அறவிடப்படும்.
- ஒவ்வொரு மீளப்பெறுகைக்கும் அறவிடப்படும் முற்பணக் கட்டணம் ரூ.990/- அல்லது மீளப்பெறுகைப் பெறுமதியில் 5% என்பவற்றில் எது கூடியதோ, அத் தொகையாக இருக்கும். சகல அறவீடுகளும் கட்டணங்களும் (மேற்குறிப்பிட்டவை உட்பட) www.hsbc.lk என்ற HSBCயின் பகிரங்க வலைத்தளத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்பதுடன் HSBCயின் தற்றுணிபிற்கேற்ப அவை கார்ட் வைத்திருப்பவர்களுக்கான முன்னறிவித்தலுடன் மாற்றப்படலாம்.

- *SMS எச்சரிக்கைகளுக்கான வருடாந்த கட்டணம்*
  - *ரூ. 2500 க்கு மேற்பட்ட பரிவர்த்தனைகளுக்கான வருடாந்த SMS எச்சரிக்கை கட்டணம் – ரூ. 600*
  - *பரிவர்த்தனை பெறுமதியை பொருட்படுத்தாமல் அனைத்து பரிவர்த்தனைகளுக்குமான வருடாந்த SMS எச்சரிக்கை கட்டணம் – ரூ. 1100 **

*ரூ. 2500 க்கு மேற்பட்ட பரிவர்த்தனைகளுக்கும் (கொள்முதல்) அனைத்து கிரெடிட் கார்ட் வாடிக்கையாளர்களுக்கும் SMS எச்சரிக்கைகள் தன்னியக்கமாக செயற்படுத்தப்படுவதுடன், வாடிக்கையாளரின் வேண்டுகோளின் பேரில், மேலே குறிப்பிட்டுள்ளவாறு* ஒரு மேலதிக கட்டணத்துடன் ரூ. 2500 க்கு குறைந்த பரிவர்த்தனைகளுக்கான SMS எச்சரிக்கைகளை வங்கி செயற்படுத்தலாம்.*

- சட்டத்தின் தேவைப்படுத்தலுக்கு அமைய, உங்கள் கடன் விபரங்களை இலங்கைக் கொடுகடன் தகவல் பணியகத்துடன் மற்றும்/அல்லது ஒழுங்குபடுத்தல் அமைப்புக்களுடன் நாம் பகிர்ந்துகொள்வோம்.
- கிறெடிட் கார்ட் வைத்திருக்கும் அனைவரும் புதிய கிறெடிட் கார்ட்டுடன் அனுப்பிவைக்கப்படும் கார்ட் வைத்திருப்பவர் ஒப்பந்தத்திற்குப் பணிந்தொழுக வேண்டும்.
- இந்த ஆவணம் உங்கள் வசதிக்காக வழங்கப்படுகிறதேயொழிய, கார்ட் வைத்திருப்பவர் ஒப்பந்தத்திற்குப் பதிலானதாக மற்றும்/அல்லது மேலாதிக்கம் செலுத்துவதாக அமையாது என்பதைத் தயவுசெய்து கவனத்திற்கொள்ளவும்.

- இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கார்ட் வைத்திருப்பவர் ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் இடையே ஏதேனும் முரண்பாடு காணப்படின், கார்ட் வைத்திருப்பவர் ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளே மேலாதிக்கம் செலுத்தும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களுக்கும் HSBCயின் விதிப்பனவுகள் கைந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களுக்கும் இடையே ஏதேனும் முரண்பாடு காணப்படின், HSBCயின் விதிப்பனவுகள் கைந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களே மேலாதிக்கம் செலுத்தும்.
- நீங்கள் குறிப்பாகக் காகித விபரக்கூற்றுக்களைக் கோரியிருந்தாலன்றி, உங்கள் கிறெடிட் கார்ட் விபரக்கூற்று, உங்கள் கிறெடிட் கார்ட் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சலில் அனுப்பப்படும் என்பதைத் தயவுசெய்து கவனத்திற்கொள்ளவும். காகித விபரக்கூற்றிற்கு மாதாந்தக் கட்டணமாக ரூ.200/- அறவிடப்படும்.
- உங்கள் கிறெடிட் கார்ட் நிலுவை, கிடைக்கும் கடன் உச்சவரம்பு, குறைந்தபட்ச கொடுப்பனவுத் தொகை மற்றும் கொடுப்பனவைச் செலுத்த வேண்டிய திகதி பற்றிய ஊர்ஜிதப்படுத்தலைப் பெறுவதற்காக நீங்கள் 'HSBC CC" சேவையில் பதிவு செய்யப்பட்டுள்ளீர்கள். இச் சேவையைப் பயன்படுத்துவதற்கு நீங்கள் விரும்பினால் 'HSBC CC" என்பதை "4722" என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்.
- HSBC நிறுவனம், தனது சில்லறை வாடிக்கையாளர் வங்கியியல் தொகுதியை நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி (NTB) நிறுவனத்திற்கு விற்பனை செய்வதற்கான அனுமதியை மத்திய வங்கியிடமிருந்து பெற்றுள்ளது என இத்தால் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, 2026 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டு (2ஞ2026) முதல் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி சேவைகளை தொடர்ந்தும் வழங்கும். நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கியின் சேவை வழங்கல்களுக்கு இணங்க, HSBC இலங்கையின் அனைத்து அட்டை வைத்திருப்பவர்களுக்கும் புதிய நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி மாஸ்டர் கார்ட் கடன் அட்டைகள் வழங்கப்படும். இந்த மாற்றம் பயன்வலுப் பெறும் திகதி வரை HSBC கடன் அட்டை செயற்பாட்டில் இருந்து வழக்கம்போல் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும.

  எமது வாடிக்கையாளர்களுக்கு உதவுவதில் நாம் முழுமையான அர்ப்பணிப்புடன் உள்ளதுடன், சீரான மாற்ற அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்காக நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கியுடன் நெருக்கமாக இணைந்து பணியாற்றி வருகிறோம். விற்பனை மற்றும் மாற்றம் நிறைவு பெறும் திகதி உரிய நேரத்தில் உங்களுக்கு அறிவிக்கப்படும்
- உங்கள் கிறெடிட் கார்ட் தொடர்பான மேலதிக விபரங்களுக்கு, எமது விதிப்பனவுகள் பட்டியல் மற்றும் எமது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் பாருங்கள் அல்லது www.hsbc.lk என்ற எமது உத்தியோகபூர்வ பொது வலைத்தளத்தில் பிரவேசியுங்கள்.
- மேற்குறிப்பிட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகள் HSBCயினால் எனக்குத் தெளிவாக விளக்கிக்கூறப்பட்டன என்பதையும் நான் அவற்றைச் சரியாகப் புரிந்துகொண்டேன் என்பதையும் நான் ஊர்ஜிதம் செய்கின்றேன்.

**CPD/INS/CBC/FEB/2026(T)**